
# வேதாகமத்திலுள்ள ஐந்து எடுத்துக் கொள்ளப்படுதல்கள்








சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

1. ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுதல்
2. எலியா எடுத்துக் கொள்ளப்படுதல்
3. இயேசுவானவர் உன்னதத்திற்கு ஏறிப்போகுதல்
4. மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதல்
5. இரண்டு சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்படுதல்

# ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுதல்

# 1



# ஏனோக்கு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி:
# 61-10-01M எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது

***125.*** *ஒவ்வொரு கிறிஸ்தவனும் வார்த்தையில் நிற்பது அவனுக்கு ஏற்றதாயிருக்கிறது. முற்றிலும் உண்மை. தேவனுடைய வார்த்தையில் நில்லுங்கள்! வானமும் பூமியும் ஒழிந்து போம், நீங்கள் ஒழிந்து போவீர்கள், நான் ஒழிந்து போவேன், சபைகள் ஒழிந்து போம், ஸ்தாபனங்கள் ஒழிந்துபோம், ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஒருக்காலும் ஒழிந்து போகாது! விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள். விசுவாசமுள்ள யாத்திரீகர்களாய்!*

***126.*** *ஏனோக்கின் காலத்தில், ஜலப்பிரளயத்துக்கு சற்று முன்பு, ஏனோக்கு வெளியே*

எட்டி பார்த்து நோவா பேழையை உண் டாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். ஏனோக்கு ஒரு தீர்க்கதரிசி. ஏனோக்கு, தான் ஒரு முன்னடையாளமாக இருப்பதை அறிந் திருந்தான். ஜலப்பிரளயம் உண்டாவதற்கு முன்பு அவன் ஒரு உதாரணத்தை அளிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தான். எனவே ஒரு பிற்பகலில் அவன் நடந்து செல்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. அவன் தேவ னுடன் இந்த நடையை மேற்கொள்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. எப்படியோ, அந்த குறிப்பிட்ட நாளில் அவன் வழக்கமாக செல்லும் வழியை மாற்றிக் கொண்டான். அவன் மலையின் அடிவாரத்தில் நடந்து செல்வதற்குப் பதிலாக ராஜாவின் பெரும் பாதையை தெரிந்து கொண்டு அதில் நடந்து கொண்டேயிருந்தான். "அவனை அவர்கள் காணவில்லை, ஏனெனில் அவன் காணப் படாமற் போனான்" அவன் ராஜாவின் பெரும்பாதையில் நடந்து மேலே சென்றான்.

*127.* ஓ தேவனே, நானும் ஏனோக்கைப் போல் இருப்பேனாக! பாதையில் நான் நடந்து செல்ல வேண்டிய நேரம் வரும் போது, ராஜாவின் பெரும்பாதையைக் கண்டு கொள்வேனாக!

*128.* நான் ஏனோக்கைக் காணமுடிகிறது. அது அவனுக்கு ஏற்றதாயிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். ஏனெனில் அவன் ஒரு தீர்க்கதரிசி. என்ன நடக்கப் போகிற தென்று அவன் அறிந்திருந்தான். எனவே அவன் மனைவியை முத்தம் செய்து விடை பெற்று, "உன்னை நான் பிறகு காண்கிறேன்" என்று கூறுவதை என்னால் காணமுடிகிறது. அவன் தன் பிள்ளைகளை கையிலெடுத்து முத்தமிட்டு விடைபெற்றான்; விவாகமான தன் மகனிடமும், விவாகமான தன் மகளிட மும் சென்று அவர்களையும் முத்தமிட்டு விடைபெற்றான்.

*129.* அவர்கள், "அப்பா எங்கே போகிறீர்கள்? உலாவி வருவதற்கா?" என்று கேட்டார்கள்.

அவன், "ஆம், சிறிது உலாவி வரச் செல்கிறேன்" என்றான்.

*130.* ஆனால் அன்று அவன் வழக்கமாக செல்லும் வழியில் செல்லவில்லை. அவன் ராஜாவின் பெரும்பாதையில் நடந்து மகிமையை அடைந்தான். அப்படி செய்வது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. அவனுக்கு இவ்விடம் விட்டுச் செல்ல பிரியமில்லை. இருப்பினும் எல்லா நீதியையும் நிறைவேற்றுவது அவனுக்கு ஏற்றதாயிருந்தது. ஏனெனில் அவன் இன்றைய சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறான். நாம் ராஜாவின் பெரும் பாதையில் நடந்து இங்கிருந்து போய்விடுவோம்.

***131.*** *ஆம், எல்லா நீதியையும் நிறை வேற்றுவது நோவாவுக்கு ஏற்றதாயிருந்தது, ஏனோக்குக்கு ஏற்றதாயிருந்தது.*



# எலியா எடுத்துக் கொள்ளப்படுதல்

# 2



# தீர்க்கதரிசியாகிய எலியா



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

①

## செய்தி: 62-0908 என் ஊழியத்தின் தற்போதைய கட்டம்

73. எலியாவின் விஷயத்திலும் அப்படித்தான். அவனைக் குறித்து சில நிமிடங்களுக்கு முன்பு நாம் பேசினோம்.

அந்த ஏழை வயோதிப தளர்ந்த தீர்க்கதரிசியாகிய எலியா வனாந்தரத்தில் இருந்தான்.

காகங்கள் கொண்டு வந்த ஆகாரத்தி னால் அவன் போஷிக்கப்பட்டான்.

அவன் தோல் சுருங்கினவனாய், உடல் வெயிலில் கருகி, ஒரு பக்கம் எண்ணெய்

கலசம் தொங்கிக் கொண்டிருக்க, மீசை வெளியில் நீட்டிக் கொண்டு, அவனுடைய மண்டை ஒருக்கால் வழுக்கையடைந்து சூரிய வெப்பத்தினால் கருகி, தடியை ஊன்றிக் கொண்டு இப்படி தள்ளாடி நடந்திருப்பான்.

ஆனால் அவனுடைய வயோதிப இருதயத்தின் ஆழத்தில் தேவனுடைய ஆவியின் துடிப்பு இருந்தது.

அவருடைய வயோதிப களைப்புற்ற ஊழியன் எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் பாதையின் முடிவுக்கு வருவதை தேவன் கண்ட போது, அவனைக் கைவிட்டாரா? அவர் ஒரு இரதத்தை கீழே அனுப்பி, அவருடைய களைப்புற்ற ஊழியக்காரனை ஏற்றிக் கொண்டு, “ஏனோக்கைப் போல் நீ நடக்க வேண்டாம்.

உன்னை இரதத்தில் வீட்டுக்குக் கொண்டு செல்கிறேன்” என்றார். அது உண்மை.

வீடுவரை உண்டான இரத சவாரியினால் அவர் அவனுடைய ஊழியத்தை முடிசூட்டினார். அது மோசமான ஒன்றல்ல, உங்களுக்குத் தெரியும்.

ஆம், அவன் வீட்டுக்கு நடக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

அவன் களைப்பாயிருந்ததால் அவர் ஒரு இரதத்தை அனுப்பி, அவனை ஏற்றிக் கொண்டார். அது எனக்குப் பிரியம்.

ஏழை, சிறு வயோதிப களைப்புற்ற ஊழியக்காரன். அவர் அவனை இரதத்தில் ஏற்றி வீடு சேரும்படி செய்தார்.

②

# செய்தி: 58-10-05E தேவனால் அழைக்கப்பட்ட மனிதன்

***59.*** *எலியாவுக்கு வயதாகிக் கொண்டே போனது, அவன் இனி அதிக காலம் ஜீவிக்க போவதில்லை என்றும், அவன் இந்த உலகத்தை விட்டு சீக்கிரத்தில் போக போகிறான் என்றும், அவன் அறிந்திருந்தான். தேவன் ஒரு மனிதனை கண்டுபிடித்து வைத்திருக்கிறார் அவன் ஒரு உண்மையான மனிதன், அவன் ஒரு நல்ல மனிதன் அவனுடைய பெயர் எலிசா.*

***60.*** *இப்பொழுது நீங்கள் கவனித்து பார்த்தால் ஒருவனுடைய பெயர் எலியாவாக இருக்கிறது இன்னொருவருடைய பெயர் எலிசாவாக இருக்கிறது, இப்பொழுது எலியா*

*நேராக எந்த அமைப்புகள் முதலானவற்றுக் குள் போகவில்லை அந்த நாட்களில் இருந்த தான அந்த மகத்தான பள்ளிகளிடத்தில் போகவில்லை. அவன் மதசாஸ்திர பள்ளி களில் இருந்த எந்த காரியத்துக்கும் போக வில்லை. அவன் என்ன செய்தான். எலியா நேராக வயல்வெளிக்கு சென்று 12 எருதுகள் பூட்டி உழுது கொண்டிருந்த ஒரு மனி தனைக் கண்டான். என்ன! உழுது கொண் டிருந்தவனான எலிசாவுக்கு ஒரு நேரான வரிசையை எப்படியாய் கவனித்து செய்ய வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் மட்டும் திரும்பிப் பின்னிட்டு பார்த்திருந்தால், பாதையை விட்டு இப்படி யும் அப்படியுமாக அசைந்து போய்விடும் என்பதை எலிசா அறிந்திருந்தான். ஒரு நேரான உழவுசாலைக்கொண்டு உழ தெரிந்த ஒரு மனிதனுக்கு உழவுசாலின்மேல் கரத்தை வைத்த பின்னர் பின்னிட்டு திரும்பி பார்க்கக் கூடாது என்று தெரியும் என்பதை தேவன்*

*அறிந்திருந்தார். அவனுடைய படிப்பை அவன் முடிக்கும்மட்டுமாய் காத்திருக்க வில்லை ஆவியிலே அவனை பற்றினான். அப்படியே அவன் ஒரு மாட்டை கொன்று ஒரு பலியை செலுத்தி அந்த சால்வையை அவன் மேல் விழுந்த மாத்திரத்தில் அவன் எலியாவோடு புறப்பட்டுப் போய்விட்டார். அவன் ஆயத்தமாய் இருந்தான், அவன் சித்த மாய் இருந்தான், அவனை வல்லவனாக்க கூடும் என்று தேவன் அறிந்திருந்தார்.*

***61.*** *தேவன் அவனுக்கு எதாவது பயிற்சி கொடுத்தாக வேண்டும். **12** ஏர் மாடுகளை உழவுசாலில் கட்டி அவைகளை கொண்டு ஒரே மனிதன் உழும்போது எப்படியாய் அவருடைய கண்களை அந்த உழவுசாலில் மேல் கவனமாக இருக்க வேண்டும் என்ற பயிற்சி அவனுக்கு கொடுத்து இருந்தார். அவனுக்கு கொஞ்சம் பொறுமையை கற்றுக் கொடுத்தார். எப்படி பொறுமையாய் இருப்*

பது என்றும், அந்த எருதுகளை ஒரே நேர் வரிசையில் நடக்கவும் பயிற்றுவித்தார்.

***62.*** அதன்பிறகு அவர் சில ஆட்களை பயிற்சிக்க வேண்டியதாயிருந்தது. அவர்களை வேதத்தின்மேல் வார்த்தையின்மேல் தேவ னோடு இசைவாய் நேரான வரிசையில் அப்படியே இருக்கும்படியாய் பயிற்சிக்க வேண்டும்.

***63.*** அப்படியானால் தேவன் உன் கூட அவனுக்கு கொஞ்சம் கற்பிக்க வேண்டி இருந்தது. நீ இங்கேயே இரு நான் கில்கால் மட்டும் போகிறேன் கர்த்தர் என்னை அழைத்திருக்கிறார் என்று கூறினான்.

***64.*** தீர்க்கதரிசியானவன் அந்த வல்லமை யும் அந்த எலியாவின் சால்வையும் அவன் மேல் இருக்க உணர்ந்த பின்னர், நான் உம்மை விடுகிறது இல்லையென்று கர்த்த ருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனை

யும் கொண்டு சொல்கிறேன் என்று கூறி னான்.

**65.** அப்படியே கில்காலுக்கு சென்றனர். அது கிறிஸ்தவ அறிக்கை ஞானஸ்நானம் இவைகளின் ஸ்தலமாய் இருக்கிறது. பின்னர் அவன் இங்கேயே இப்பொழுது இரு இது போதுமானது. நீங்கள் ஞானஸ்நானமும் அறிக்கையும் செய்து விட்டீர்கள் இது போதுமானது. நான் பெத்தேல் மட்டுமாய் சென்று வருகிறேன் என்றான். அதற்கு, "தேவ னுடைய வீடு என்று" அர்த்தமாம்.

**66.** இப்பொழுது அது சொல்லிக் கொடுக்கின்ற அநேகருக்கு அது எல்லாம் சரியாய் தான் இருக்கும். ஓ நான் இப்பொ ழுதுதான் சபைக்குள்ளாக வந்து ஐக்கியப்படு கிறேன். ஏன் அங்கேயே தரித்திருக்க கூடாது?

***67.*** *ஆனால் கவனியுங்கள் எலிசாவினால் அந்த விதமாய் நினைத்துக்கொள்ள முடிய வில்லை. தேவனுடைய வல்லமையை அவன் ஏற்கனவே உணர்ந்து விட்டான். இன்னும் அதிகமாக அவனுக்கு இருக்கிறது என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அவன், "நான் உம்மை விடுகிறது இல்லையென்று கர்த்தரு டைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்கிறேன்" என்று கூறினான். ஓ எப்படியாய் நான் அதை விரும்புகிறேன்.*

***68.*** *அவன் தேவனுடைய அப்பத்தின் வீடாகிய பெத்தேலுக்கு சென்றான். அங்கே அவன் ஒரு கூட்ட பண்டிதர்களை கண் டான். அவர்கள் யாவரும் பயிற்சி பெற்ற பிரசங்கிமார்களாய் இருந்தார்கள். அவர்கள் சுற்றி நடந்து அவரிடத்தில் வந்து, ஐயா என்ன என்று உமக்கு தெரியுமா? நீங்கள் அந்த குச்சியின் சிறிய முனையில் இருக்கி*

றீர்கள். எலியா உம்மிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட போகிறார் என்பது உமக்கு தெரியுமா? அவர் மிகவும் வயது சென்றவ ராயிருக்கிறார். அவரால் நீண்டகாலம் இனி ஜீவிக்க முடியாது. எலியா எடுத்துக்கொள் ளப்பட போகிறான். நீர் அங்கே ஒரு பைத்தியக்காரனை போன்று நீர் நின்று கொண்டிருக்கப்போகிறீர்.

**69.** நான் உங்களுக்கு ஒரு காரியத்தை இப்பொழுது கூறட்டும். தேவனை அப்பொ ழுதாவது ஒருவன் ருசித்திருப்பானேயானால் அவனால், ஒரு மனிதனால் உண்டாக் கப்பட்ட தொட்டியிலிருந்து அவனுடைய தாகத்தை தீர்த்துக் கொள்ளவே முடியாது, அல்லது தீர்த்துக்கொள்ள சித்தமாய் இருக்க மாட்டான். ஆம். ஆனால் அதைச் செய்ய முடியாது. அவர்கள் அங்கேயுள்ள தீர்க்க தரிசிகளின் பள்ளியில் பெற்ற அவர்களுடைய மத சாஸ்திரம் தேவனுடைய மனிதனின்,

அதாவது தேவனை ஏற்கனவே ருசித்தவனின் தாகத்தை அங்கே தீர்க்காது.

*70.* அவர்கள் தொடர்ந்து அதை விளக்கி. ஓ, நீர் இங்கேதான் இருக்க வேண்டும். ஏன் ஆறு வாரங்களில் நாங்கள் உமக்கு ஒரு (Ph.d.) பட்டம் கொடுத்து விடுவோம். நாங்கள் உமக்கு ஒரு பயிற்சியைக்கொடுத்து உமக்கு பிரசங்கிக்க உனக்கு ஒரு அங்கீகாரம் கொடுத்து அனுப்புவதற்கு சுமார் நாலு வருஷமாகும் என்று உங்களுக்கே தெரியும். நீங்கள் அந்த தகுதியை பெற்றுவிட்டீர் களென்றால், நாங்கள் உம்மை எங்களுடைய ஸ்தாபனத்திற்கு வெளியே அனுப்புவோம் என்று நம்ப செய்வார்கள். ஒரு தேவனுடைய மனிதனை அது ஒருபோதும் திருப்திப் படுத்தாது. நீர் மட்டும் ஒரு நாலு அல்லது ஐந்து வருடங்கள் எங்களோடு தரித்திருந் தால், உம்மை ஒரு போதகராயிருக்க நாங்கள் உமக்கு பயிற்சி அளிப்போம்.

***71.*** *அந்த விதமான காரியத்துக்கு அவனுக்கு நேரமில்லை. அவன் ஊற்றிற்கு போகும் பாதையில் போய்க்கொண்டிருக்கிறான். அதற்கும் மேலாக அவன் வந்துவிட்டான். பரலோகத்தின் ருசியை அவனுடைய ஆத்துமாவில் ஏற்கனவே அவன் ருசித்திருக்கிறான்.*

***72.*** *அதற்கு அவர், "உன்னுடைய தலைமையான அவர் எடுத்துக்கொள்ளப்பட போகிறார் என்று உனக்கு தெரியுமா என்று" கேட்டார்...*

***73.*** *அவன் என்ன கூறினான் என்பதை கவனியுங்கள், "ஆம் நான் அதை அறிவேன்; ஆனால் நீர் பேசாமல் அமைதியாய் இரும்" என்றான். வேறு வார்த்தையிலிருந்து கூறினால், "உன் உயிரை காப்பாற்றிக் கொள், அதை குறித்து எனக்கு கூற முயற்சிக்காதே. நான் என்ன செய்யப் போகிறேன் என்று என்னிடத்தில் கூற முயற்சிக்காதே; நான்*

எங்கே போகிறேன் என்று எனக்கு தெரியும்" என்றான்.

**74.** தேவனே அதைப்போன்ற மனிதர் களை எங்களுக் குத்தாரும். இதன்பேரில் இப்படி அப்படி அசைவதும் அதன்பேரில் இப்படி அப்படி அசைவதுமாயிராத, தேவ னால் பயிற்சிவிக்கப்பட்ட மனிதர்களை தாரும்.

**75.** நான் எங்கே போகிறேன் என்று எனக்கு தெரியும்; அது குறித்து என்னிடம் பேச வேண்டாம். அமைதியாய் இரும். என்னை அதைரியப்படுத்த முயற்சிக்காதே ஏனென்றால் அது எந்த நன்மையும் செய்ய போவதில்லை.

**76.** ஒரு ஜெபம் ஏறெடுக்கப்பட்ட ஜனங் களுக்கு மட்டும் அந்த அளவு தைரியம் இருக்குமானால் நலமாயிருக்கும்.

***77.*** “ஓ அற்புதங்களின் நாட்கள் கடந்து போயிற்று; அது உண்மையானதல்ல நீங்கள் கவனியுங்கள் நீங்கள் மீண்டும் வியாதியா வீர்கள்.”

***78.*** நீங்கள் “பேசாமல் அமைதியாக இருங்கள் அதைக்குறித்து ஒன்றும் எனக்கு கூறவேண்டாம்; நான் போய்க்கொண்டே இருக்கிறேன். எழுப்புதல் வந்துக் கொண் டிருக்கிறது தேவன் அதை வாக்களித்திருக் கிறார்.” ஓ, தேவனுடைய குமாரர்களாகிய உங்களைத் தான். அக்கறையின் ஆதிக்கத்திற் குள்ளாக பயமின்றி பிரவேசியுங்கள். அச்ச மின்றி பிரவேசியுங்கள். தேவனை அவ ருடைய வார்த்தையில் எடுங்கள்;

***79.*** “அவர் எடுத்துக்கொள்ளப்பட போகி றார் என்பதை நான் அறிவேன், ஆனால் நான் அக்கறை கொள்வது அதுவல்ல என் னுடைய கவனத்தை இழுக்கத்தக்கதாக. இங்கே உங்களிடத்தில் ஒன்றுமே இல்லை.

*உங்களுடைய பட்டங்கள் எல்லாம் உங்களுடைய (Ph.d. BA.) இந்த எல்லா காரியங்களும் என்னை திருப்திபடுத்துவதில்லை. பேசாமல் அமைதியாய் இருங்கள். நீர் அங்கே எங்கேயோ வெடிக்கப்போகிறீர்" என்றான்.*

*80. "சரி, அப்படி நான் வெடித்தால் வெடித்துபோகட் டும்; நான் என் பாதையில் இருக்கிறேன்" என்று கூறி அவன் போய்க் கொண்டே இருந்தான். உன்னால் அதை கடந்து போக முடியாது.*

*81. "என்னால் அதை கடந்து போக முடியாது என்று எனக்கு தெரியும், ஆனால் தேவன் கடந்து கொண்டு போக பண்ணுவார் என்று" கூறினான். சரி, "எலிசா யோர்தானுக்கு போகிறான்; நானும் அவனோடு கூட போகிறேன்." ஒவ்வொரு ஜீவியத்திலும் தேவனுக்கு யோர்தான் தேவையாயிருக்கிறது.*

*82.* *எனவே எலிசா சுற்றிவந்தான். எலியா எலிசாவினிடத்தில் நீ ஒரு வாலிப மனிதன் என்றான். ஒருக்கால் இந்தவிதமாக உண் மையிலேயே உனக்கு எந்த படிப்பும் இருந் ததில்லை என்று கூறியிருக்கலாம். அந்த வயதான தீர்க்கதரிசி அவனை பரீட்சித்து பார்க்க முயன்று கொண்டிருந்தான். அவன் நீ ஒரு வாலிப மனிதன் உனக்கோ அதிகப் படியான பள்ளி பயிற்சி கிடையாது. சொல்லப்போனால் உனக்கு ஒரு இலக்கன பள்ளி படிப்பு கூட கிடையாது. உனக்கு செய்ய தெரிந்ததெல்லாம் எப்படி உழ வேண்டும் என்பதுதான். எனவே நீ இங்கு தங்கியிருந்து உன்னுடைய பிஏ பட்டத்தைப் பெற்றுக் கொள் என்று இதேபோன்று கூறி யிருக்கலாம் புரிகின்றதா? நீ இங்கேயே தங்கி இருந்து உன்னுடைய பட்டத்தைப் பெற்றுக் கொள்.*

*83.* *ஆனால் எலிசாவிடம் அல்ல. ஒரு முறை தேவனை தொட்டவனும் அவன்மேல்*

அபிஷேகத்தின் வல்லமையை உணர்ந்தவ னுமான அந்த மனிதனிடம் அல்ல. அவன் சொன்னான், "நான் உம்மை விடுகிறது இல்லையென்று கர்த்தருடைய ஜீவனை கொண்டும் உம்முடைய ஜீவனை கொண்டும் சொல்கிறேன்" என்று கூறினான். அவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. அவன் தரிசனத்தை கண்டான். என்ன சம்பவிக்க போகிறது என்று அவன் அறிந்திருந் தான். அவர்கள் இருவருமாக யோர்தானுக்கு சென்றார்கள். யோர்தான் என்றால் மரணம் என்று அர்த்தம். வயதான மனிதனும் வாலிபமான மனிதனுமாய் அங்கே அவர்கள் நின்றார்கள். அது உண்மையாகவே கிறிஸ்துவுக்கும் அவ ருடைய சபைக்கும் பிரதிநிதித்துவமாய் இருக் கிறது.

84. அங்கே யோர்தான் அண்டையில் அவர்கள் இருவரும் நின்றார்கள். யூதேயா வின் குன்றுகளில் இருந்து மகத்தான பாறை

*களில் இருந்து வெளியே ஓடி கர்ஜனையை போன்று அவர் அதோ வந்து கொண்டிருக்கிறார். நரைத்த தலைமயிர் அவருடைய முதுகின் மேல் தொங்கிக் கொண்டிருக்க மங்கிய கண்கள் யோர்தானின் ஊடாக பார்த்துக்கொண்டிருக்க எலியா அங்கே இருந்தான். அவனுடைய ஒவ்வொரு அசை வையும் இந்த வாலிபன் கவனித்துக் கொண் டிருந்தான். ஒருவன் வாலிப மனிதன் தேவனுடைய சித்தத்தை நடப்பிக்கும்படியாக ஒரு தரிசனத்திற்காக காத்து கொண்டிருக்கி றான். இன்னொருவனோ வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறான். அவர்கள் இருவரும் யோர்தான் அண்டையில் இருந்தார்கள். எலி சாவை பொருத்தமட்டில் எலியா வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.*

*85. எலியா ஒரு கசப்பான ஜீவியத்தை உடையவனாக இருந்தான். அந்தப் பெண் பிரசங்கியாகிய யேசபேலும், ஆகாபும், அவ னுடைய பாதையை மிகவும் கரடுமுரடாக்*

*கினார்கள். அவன் கடந்து வந்த கற்களும் அதன் ஊடாக போக வேண்டியதாயிருந்த எல்லா காரியங்களையும் எலியா களைத்து போய் கொண்டு இருந்தான். ஒரு நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை முடித்ததை அவன் அறிந்திருந் தான். யோர் தானின் அக்கரையில் அவனுடைய ஓய்வு இருந்தது. ஆனால் எலிசாவோ எலியாவின் மேலிருந்த அந்த ஆவியையே கவனித்துக் கொண்டிருந்தான்.*

***86.*** *எனவே நீங்கள் கவனித்து பார்த்தால் ஒவ்வொரு விசுவாசியும், நீங்கள் விட்டு போக வேண்டும் என்ற கட்டத்திற்கு வரும் போது யோர்தானின் குளிர்ந்த தண்ணீர் உங்களுடைய பாதங்களில் படுவதை நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் கடந்து போக போகின் றீர்களா அல்லது இல்லையா? யோர்தான் என்பது பிரிந்து போகிறதாய் இருக்கிறது. பிரிதலாய் இருக்கிறது.*

*87. அங்கே பின்னால் குன்றின் மேல் நின்று கொண்டிருந்த பிரசங்கிமார்கள் இன்னமும் எலிசாவை பார்த்து, "நீ பின்தொடர்ந்து போகாமல் இருப்பது நலம். நீயும் போய் விடுவாய் என்று சத்தமிட்டார்கள்." இன்றைக்கும் அதேவிதமான குறிப்புதான் வருகின்றது என்பதை நீங்கள் கேட்கிறீர்களா?*

*88. ஆனால் எலிசாவோ தேவன் தேவனாய் இருந்து அது அவருடைய தீர்க்கதரிசியானால் நான் அவனு டைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதை நான் செய்வதற்கு எனக்கு அவருடைய ஆவி தேவையாய் இருக்கிறது. எனக்கு அவனுடைய பள்ளிக்கூடம் தேவையில்லை. அவர்களுடைய பள்ளி அதை செய்து இருக்குமானால் அவர்கள் அவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்வார்கள். ஆனால் அதைச் செய்யும்படியாய் தேவன்*

என்னை அழைத்திருக்கிறார். அவருடைய ஆவி எனக்கு தேவையாயிருக்கிறது.

**89.** சபைகளின் பள்ளிக்கூடங்கள் அந்த ஸ்தானத் தையும் இயேசுவானவர் அளித்த வல்லமையையும் எடுத்துக்கொண்டிருந்தால் வருஷங்களுக்கு முன்னரே அதை அவர்கள் எடுத்திருக்க வேண்டும். மெதோடிஸ்ட் பாப்டிஸ்ட் கத்தோலிக்க பிரஸ்பிடெரியன் ஆனால் அதனால் அதைச் செய்ய முடியாது.

**90.** அதற்கு இயேசு கிறிஸ்துவின் ஆவி தேவையாய் இருக்கிறது. எல்லா ஸ்தாப னங்களின் மற்ற எல்லா காரியங்களின் பின்னால் இருக்கின்ற யோர்தானை நீங்கள் கடந்து தனிமையாய் தேவனோடு நிற்க வேண்டும்.

**91.** எனவே தேவன் யோர்தானிலே அவனோடு நின்றார். எலியா மேல்நோக்கி பார்த்துக்கொண்டே, அங்கே எங்கோ அக் கரையில் தேவன் அவனை சந்திப்பார் என்

பதை அறிந்தவனாய் இருந்தான். அவனுடைய சால்வையை அவன் கழற்றி சுற்றும் முற்றும் அந்த வாலிபனை பார்த்து யோர்தானை அடித்தான். அவன் அப்படி செய்த போது யோர்தான் பிளந்தது. அவர்கள் உலர்ந்த தரையில் கடந்து சென்றார்கள்.

***92.*** பாருங்கள். யோர்தானில் ஒரு வழியை உண்டு பண்ண உங்களிடத்தில் ஏதோ காரியத்தை வைத்துக் கொண்டிருக்க யோர்தான் ஒன்றும் அவ்வளவு மோசமானது அல்ல.

***93.*** ஓ, அவர்கள் அக்கறையை சேர்ந்த போது. அங்கேயிருந்த ஒவ்வொரு புதரிலும் ஒரு குதிரையும் ஒரு ரதமும் பூட்டப் பட்டிருந்தது. எலியாவை வீட்டிற்கு கொண்டுவர ராஜாக்களின் ராஜாவானவர் ஒரு வழி துணையை அனுப்பி இருந்தார். எலியாவை பொருத்தமட்டில் அது எல்லாம் முடிந்துவிட்டது. சுமார் என்பது வருட

காலமாக அவன் அதில் போதுமானதை பெற்றிருந்தான். அங்கே ஜனங்க ளோடு சந்தடிசெய்துக்கொண்டு தொல்லைகள் முதலானவைகளின் ஊடாக சென்றிருந்தான். அவன் போவதற்கு ஆயத்தமாக இருந்தான். அவன் சுற்றிமுற்றி எலிசாவை பார்த்தான்.

**94.** எலிசாவோ ஒரு தரிசனத்தை காண விரும்பினான். எல்லா பள்ளிப்படிப்பும் அவ னுக்கு இருந்தது. அவன் அங்கேயே இருந்து விட்டுயிருக்கலாம். அவர்களோ எதையும் நோக்கினவர்களாக இல்லை. தேவனோ அவருடைய சொந்த வழியில் அவனை பயிற் சிக்கு போகிறார். ஆக அவன் அப்படியே சுற்றி பார்த்தபோது அந்த புதர்கள் எல்லாம் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகள் பூட் டப்பட்ட இரதங்கள் இருக்க கண்டான். அது எலிசாவிற்கு ஏதோ காரியத்தை செய் தது. அவன் ஒரு தரிசனம் கண்டான். ஆம் சகோதரனே!

***95.*** *தேவன் எலியாவை உயரக்கொண்டுப் போன போது எலியாவின் ஆவியை இரண்டு மடங்காக பெற்றவனாய் எலிசா, திரும்பி வந்தான். அவன் எழுப்புதலுக்கு அப்பொழுது ஆயத்தமாய் இருந்தான்.*

***96.*** *அதற்கு முன்னர் வயலை உழும் ஒரு பையனாக இருந்த அந்த மனிதனை அப் பொழுது கவனியுங்கள். தேவன் அவனுடைய பெயரை அழிவில்லாததாக்கினார். எல்லா தீர்க்கதரிசிகளும் சுற்றி நின்று கொண்டு அவனை கவனித்துக் கொண்டு அவனுக்கு தலைவணங்க வேண்டி இருந்தது ஏனென் றால் தேவனுடைய வல்லமையை அவன் தன்மேல் உடையவனாக இருந்தான்.*

***97.*** *யோர்தானுக்கு ஊடாக சென்று உலகத்தின் காரியங்களிலிருந்து அவர்களை வேறுபிரித்துக் கொண்ட ஆண்கள் பெண் களுடைய பாதங்களுக்கு தேவன் இந்த உலகத்தை தலைவணங்க செய்ய போகிற*

வேலை வந்துக்கொண்டு இருக்கின்றது. சகோதரனே சகோதரியே இன்றிரவு நீங்கள் என்ன செய்தாலும் நீங்கள் என்ன நினைத் தாலும் தேவனுடையவர்களாய் நீங்கள் யோர் தானைக் கடந்து போங்கள். தொடர்ந்து போய் வேறுபிரிந்து உலகத்தை பின்னாலே விட்டு விடுங்கள். தேவனுடைய சேவைக்காக அவர் தாமே உங்களை பயிற்சிவிப்பாராக. இந்த எழுப்புதலுக்கு முந்தினதான ஒரு நாளில் நாம் ஜீவித்துக்கொண்டு இருக்கி றோம், ஆனால் தேவனோ தேடிக்கொண்டும் இருதயங்களை கண்டுபிடிக்க முயன்று கொண்டும் இருக்கிறார்.

# இயேசுவானவர் உன்னதத்திற்கு ஏறிப்போகுதல்



# 3


இயேசுவானவர்
உன்னதத்திற்கு
ஏறிப்போகையில்...
KUEKER

# சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-04-20 கல்லறையிலிடுதல்

*69. இப்பொழுது அவருக்கு என்ன சம்ப வித்தது? அவர் சிலுவையிலிருந்து இறக்கப் பட்டு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு வின் கல்லறையில் வைக்கப்பட்டபோது, அவர் எங்கே சென்றார்?*

*70. அவர் மிகவும் தரித்திரராயிருந்தார். அவருக்கு தம்முடைய தலையைச் சாய்க்க ஒரு இடமும் இல்லாதிருந்தது. அவர் ஒரு முறைதவறிப் பிறந்த பிள்ளை என்ற ஒரு முறை கேடான பெயரை தனக்கு பின்னே கொண்டவராக அவர் ஒரு முன்னணையில் பிறந்தார். அவர் பூமியிலே நகைக்கப்பட் டார், வேடிக்கையாக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார். அவர் வேடிக்கையாக்கப்*

பட்டு புறக்கணிக்கப்பட்டார். அவர் மரித்த போது அவர் இரண்டு கள்வர்களுக்கு மத்தியிலே தலையாய தண்டனையான சிலுவை மரணத்தினூடாகவே மரிக்க வேண்டியதாயிருந்தது. அவரை அடக்கம் பண்ண ஓர் இடம்கூட இல்லாதிருந்தது. அவர் மற்றொரு மனிதனுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அதே பரலோகத்தின் தேவன்தாமே பூமிக்கு வருகிறாரே! நாம் ஒரு சிறு துன்பத்தினூடாக செல்ல வேண்டும் எனும்போது நாம் யாருக்காக அவ்வாறு செய்கிறோம் என்று நாம் எண்ணிப் பார்க்கிறோமா? அவர் நமக்காக எத்தகையக் காரியத்தை செய்துவிட்டாரே! நண்பனே, அதைக் குறித்து எண்ணிப் பார்த்து, அதைக் குறித்து ஆராய்ந்துபார்.

**71.** ரோம போர்ச்சேவகனோ, "மெய்யாகவே அது தேவ குமாரன்தான்" என்றான். பாவியும் அதனை அடையாளங் கண்டு கொள்ள வேண்டியதாயிருந்தது. யூதாஸ்,

"நான் குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக் கொடுத்து விட்டேனே" என்றான். அவன் அதை அடையாளங்கண்டு கொள்ள வேண்டியதாயிருந்தது. முழு பூமியும் அதை அடையாளங்கண்டு கொண்டது.

**72.** அதன் பின்னர் அவர் எங்கே சென்றார்? ஒரு மனிதன் மரிக்கிறபோது, அது இதனை முடித்து விடுகிறதா? இல்லை ஐயா. அவர் அந்த விதமாக மரிக்க வேண்டியதாயிருந்தது. ஏனென்றால் அவர் அந்த விதமாக மரிப்பார் என்று தேவனுடைய வேதம் கூறியிருந்தது. அவர் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தார். அந்தக் காரணத்தினால் அவரால் தன்னுடைய ஜீவியத்தில், "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறமுடிந்தது.

**73.** ஏனென்றால் தாவீது ஆவியின் ஏவுதலின் கீழ் வேதாகமத்தில் ஓர் இடத்தில்

மட்டுமே கூறினான். வார்த்தையினால் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகிய தேவனுடைய மனுஷன் தாவீது கூறும்போது, “என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்” என்றான்.

**74.** இயேசு, “இந்தச் சரீரத்தை அழித்துப் போடுங்கள், மூன்று நாட்களுக்குள்ளே நான் இதை எழுப்புவேன்” என்றார். தேவனுடைய வார்த்தைத் தவறிப்போக முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஓ, என்னே!

**75.** அவரால் அதின்பேரில் பயபக்தியாய் சார்ந்திருக்க முடிந்ததென்றால், தேவனுடைய வார்த்தை தவறிப்போக முடியாது என்று விசுவாசிக்க முடிந்ததென்றால், நாம் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்றும், அது நம்முடைய இருதயத்தில் நம்முடைய மீட்பர் ஜீவிக்கிறார் என்பதை இப்பொழுதே நாம் அறிந்துள்ளோம் என்பதற்கு

ஒரு சாட்சியுள்ள தென்றும், என்றோ ஒரு நாளில் அவர் மீண்டும் வருவார் என்பதின் பேரிலும் நாம் எவ்வளவு அதிக பயபக்தி யோடு சார்ந்திருக்க முடியும். கிறிஸ்துவுக்குள் ளிருப்பவர்களைத் தேவன் அவரோடே கொண்டு வருவார் என்று நிச்சயமாக நம்பி யிருக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள்.

**76.** அங்குதான் அவர் இருந்தார். அந்த சரீரத்தின் ஒரு உயிரணுவும் அழிந்து போகக் கூடாது என்பதை அவர் அறிந்திருந்தார். எழுபத்திரண்டு மணி நேரத்தில் அதற்கு அழிவு உண்டாகின்றது. அந்தக் காரணத் தினால் தான் அவர் ஒருபோதும் மூன்று நாட்கள் தரித்திருக்கவே இல்லை. அவர் வெள்ளிக்கிழமை பிற்பகல் மரித்து, ஞாயிற் றுக்கிழமை காலையில் உயிர்த்தெழுந்தார். ஆனால் அது மூன்று நாட்களுக்குள் சம்ப வித்தவையாயிருந்தது. அந்த மூன்று நாட் களுக்குள் அவர் மீண்டும் உயிரோடு எழ

வேண்டியதாயிருந்தது; ஏனென்றால் அவர் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தார்.

**77.** இதோ அவர் செல்கிறாரே! அவர் ஜீவனை விட்டபோது, அவர் எங்கே சென்றார்? வேதம், "அவர் ஏறினார், அவர் நோவாவின் காலத்தில் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, மனந்திரும்பாமற்போன காவலில் உள்ள ஆத்துமாக்களுக்குப் போய் பிரசங்கித்தார்" என்று கூறியுள்ளது. அவருடைய ஆத்துமா, அவருடைய ஆவி, அவருடைய சொந்த ஆவிக்குரிய சரீரம் கீழே சென்றது. நாம் அவரைப் பின்தொடருவோமாக. இன்றிரவு ஒரு சில நிமிடங்கள் நீங்கள் அவரைப் பின்தொடர்ந்து செல்ல விரும்புவீர்களா? அவர் எங்கே சென்றார் என்பதை நாம் காண்போமாக.

**78.** மானிட வர்க்கங்கள் வாழும் பகுதிக்கு கீழே பிசாசின் அதிகார எல்லை உள்ளது. அதற்குக் கீழே இதற்குச் சற்று

மேலே அநீதியுள்ள ஆத்துமாக்கள் இருக்கின் றன. இதற்குக் கீழேதான் சாத்தானின் இராஜ் ஜியம், பாதாளம் உள்ளது. பரிசுத்த ஆவி யானவரோ நமக்கு மேலே இருக்கிறார். அதற்குக் கீழே உள்ள பலிபீடத்தில் நீதி மான்களின் ஆத்துமாக்கள் உள்ளன. அதன் பின்னர் தேவன் தாமே எல்லாவற்றிற்கும் மேலே இருக்கிறார். ஒன்று கீழ்நோக்கிச் செல்கிறது. ஒன்று மேல் நோக்கிச் செல் கிறது. பூமியின் மேல் உள்ள இரண்டு ஆவிகளே இந்தப் பூமியில் உள்ள ஜனங்களை இயக்குகின்றன.

**79.** இயேசுவானவர் மரித்தபோது, அவர் அங்கே கீழே உள்ள பிசாசின் மண்டலத் திற்கு மேலே செல்கிறார். வெள்ளிக் 'கிழமைப் பிற்பகல் அவருடைய மரணத் திற்குப் பிறகு அவர் (சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசி] இழக்கப்பட்டோரின் ஸ்தலத்தின் வாசலைத் தட்டுவதை என்னால் காண முடிகிறது. நாம் அவரை ஒரு நிமிடம்

பின்தொடருவோமாக. வாசல் திறக்கிறது. அங்கே ஸ்திரீகள் இருந்தனர். அங்கே புருஷர்கள் இருந்தனர். அங்கே வாலிப ஸ்திரீகள் இருந்தனர். அங்கே வயோதிகர்களும் இருந்தனர். அவர்கள் எல்லோருமே இழக்கப்பட்ட ஆத்துமாக்களின் சிறையிருப்பு என்றழைக்கப்பட்ட அந்தப் பயங்கரமான இடத்தில் இருந்தனர்.

*80.* எனக்கு நேரமிருந்திருந்தால் நான் அதை உங்களுக்கு கூறியிருப்பேன். அது ஒரு தரிசனமாயிருக்கலாம். ஆனால் ஒரு சமயம் நான் பாவியாயிருந்தபோது, எனக்கு அறுவை சிகிச்சை நடந்தபோது, அந்த ஸ்தலத்திற்கு சென்றேன். அப்பொழுது நான் இரக்கத்திற்காகக் கூக்குரலிட்டேன். நான் தரிசனத்திலிருந்து தெளிந்தபோது, நான் மேற்கு திசையில் என் கைகளை வானத்தை நோக்கியவாறு மேலே உயர்த்திக் கொண்டு நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிலுவையின் ஒளி என் மேல் பிரகாசித்தது.

*81.* *ஆனால் அங்கே அந்தத் துக்ககரமான ஸ்தலத்தில் உள்ள வாசலண்டை இயேசு வானவர் நடந்து சென்றார். அவர் தேவ குமாரனாயிருந்தார் என்று ஒவ்வொரு காரியமும் சாட்சி பகரவேண்டியதாயிருந்தது. ஏனென்றால் நோவாவின் நீடிய பொறுமையான நாட்களில் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டிருந்தது. வாசலைத் தட்டுகிறார், அவர், "ஏனோக்கு ஒருவரைக் குறித்துப் பேசினானே, அவர்தான் நான். நான் சர்ப்பத்தின் தலையை நசுக்க வேண்டியதாயிருந்த ஸ்திரீயின் வித்தாயிருக்கிறேன். ஒவ்வொரு தேவனுடைய வார்த்தையும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நான் அப்பால் உள்ள கல்வாரியில் மரித்தேன். நான் என்னுடைய சபையை கிரயத்திற்குக் கொண்டேன். ஏனோக்கு ஒருவரைக் குறித்து பேசினானே, நான்தான் அவர்" என்றார். அவர்கள் இரக்கமின்றி, நம்பிக்கையின்றி இருந்தனர். ஏனென்றால் அவர்கள் மீறி நடந்திருந்தனர். அவர்க*

ளுடைய முகத்திற்கு முன்னரே வாசலானது அடைக்கப்பட்டது.

*82.* அதற்கு கீழ்ப்பகுதியோ பிசாசுகளின் மண்டல மாயிற்றே! அதற்கும் கீழே பாதாளத்தின் வாசல்களாயிற்றே! அவர் வாசலைத் தட்டுகிறார். (சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசி.)

*83.* அவர் கல்லறையில் இருந்தபோது, அவருடைய சரீரம் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அவர் நீதியுள்ளோரும், அநீதியுள்ளோரும் செல்கிற ஸ்தலங்களுக்கு விஜயம் செய்தார். இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் ஒன்று இந்த ஸ்தலத்திற்கு அல்லது மற்றொரு ஸ்தலத்திற்கு செல்வீர்கள்.

*84.* அவர் பாதாளத்தின் வாசலைத் தட்டுகிறார். (சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசி.) அவர் தட்டின போது பிசாசே வந்தான். அப்பொழுது அவன், "ஓ, முடிவாக

நீ இங்கேயே வந்துவிட்டாயே. நான் ஆபேலைக் கொன்றபோதே, நான் உன்னைக் கொன்றுவிட்டேன் என்று நிச்சயமாகவே எண்ணியிருந்தேன்'' என்று அவன் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

*85.* நீங்கள் பாருங்கள், அந்த வித்து ஏதேன் தோட்டத்தில் வாக்களிக்கப்பட்ட போது, பிசாசு அந்த வித்தை அழிக்கத் தொடர்ந்து முயன்று வந்தான். ஆபேலின் மரணமும், சேத்தின் வருகையும், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலாயிருந்தது. அந்த வித்து தொடர்ந்து வரவேண்டும். அவனோ அதை அழிக்க முயற்சித்தான்.

*86.* அவன், ''நான் ஆபேலைக் கொன்றபோது, உன்னை அழித்து விட்டேன் என்றே எண்ணியிருந்தேன். நான் தீர்க்க தரிசிகளைக் கொன்றபோதே, உன்னை அழித்துவிட்டேன் என்றே எண்ணிக் கொண்டேன். நான் யோவானைச் சிரச்சேதம் பண்ணினபோதே,

உன்னை அழித்துவிட்டேன் என்ற நிச்சயத்தோடு இருந்தேன். ஆனால் இப்பொழுதோ எல்லாவற்றிற்கும் பிறகே நீ வந்துள்ளாய். நான் இப்பொழுது உன்னை வென்று விட்டேன்'' என்றான். ஓ, என்னே!

*87.* அவர், "சாத்தானே, இங்கே வா" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அவர் இப்பொழுது எஜமானாயிருக்கிறார். சாத்தானின் பக்கவாட்டில் தொங்கிக் கொண்டிருந்த மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய அந்தத் திறவுகோலை அவர் தம்முடைய கரம் நீட்டி பற்றிப் பிடிப்பதை என்னால் காண முடிகிறது. மேலும் அவர், "நான் உன்மீது சட்டப்பூர்வமான முன்னறிவிப்பைத் தெரிவிக்க விரும்புகிறேன். நீ இவ்வளவு காலம் முழுமையாக பொய்யுரைத்து ஏமாற்றி வந்தாய். நான் ஜீவனுள்ள தேவனுடைய கன்னிப்பிறப்பின் குமாரனாயிருக்கிறேன். என்னுடைய இரத்தம் இன்னமும் சிலுவையில் ஈரக்கசிவோடு உள்ளது. முழு

கடனும் செலுத்தப்பட்டாயிற்றே! உனக்கு இனிமேல் எவ்வித உரிமையுமே கிடையாது. நீ துகிலுரியப்பட்டிருக்கிறாய். அந்தத் திறவு கோல்களை என்னிடம் கொடு'' என்று கூறு வதை என்னால் கேட்க முடிகிறது. அது உண்மை, மேலும் அப்படியே சுற்றித்திரும்பி தன்னுடைய காலினால் ஒரு நல்ல வலுவான உதையை அவனுக்கு கொடுத்து, கதவை வேகமாக இழுத்து அடித்து மூடி விட்டு, "அங்கேயே தரித்துக்கிட", இது முதற் கொண்டு நான்தான் எஜமான் என்ற கூறு வதையும் என்னால் கேட்க முடிகிறது.

88. இப்பொழுது, அவர் இராஜ்ஜியத் திற்கான திறவுகோல்களை உடையவரா யிருக்கவில்லை. ஏனென்றால் அவர் அவை களை பேதுருவினிடத்தில் கொடுத்துவிட் டார். நாம் எல்லோரும் அதைக் காலையில் தண்ணீர் ஞானஸ்நானத்தில் புரிந்து கொண் டோம். ஆனால் அவர் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடை

யவராயிருந்தார். அவர் அவைகளை எடுத்துக் கொண்டார்; அவர் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர், "நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்றார். பேதுருவோ பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உடையவனாயிருந்தான். சாத்தான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உயைடவனாயிருந்தான்; ஆனால் இப்பொழுதோ இயேசு அவைகளைப் பெற்றுக் கொண்டு, அவரே எஜமானாயிருக்கிறார்.

*89.* இதோ அவர் எழும்பத் துவங்குகிறார். இது ஈஸ்டர் தினமாயுள்ளது. நேரமோ துரிதமாகக் கடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அங்கு மற்றொரு குழு இருக்கிறது. யோபு எங்கேயிருக்கிறான்? ஆபிரகாம் எங்கே இருக்கிறான்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்த அந்த நபர்கள் எங்கேயிருக்கின்றனர்? அவர் அவர்களை மறந்து விட்டாரா?

மரணம் அவர்களை அடியோடு அழித்துப் போட்டு விட்டதா? அதைக் குறித்தெல்லாம் அவ்வளவு தானா? இல்லையே, இல்லவே இல்லை. தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டியவராயிக்கிறார்.

*90.* என்னால் அவரைக் காணமுடிகிறது. நாம் பரதீசுக்குள்ளாக ஒரு சிறு கண்ணோட் டமிடும்படியாக அங்கு நோக்கிப்பார்ப்போ மாக. சாராளும், ஆபிரகாமும் சுற்றி நடந்து வருவதை நான் காண்கிறேன். கொஞ்சங் கழித்து (சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசி.) யாரோ ஒருவர் வாசலண்டை நிற்கிறார். அப்பொழுது ஆபிரகாம் சென்று கதவைத் திறந்து, “தேனே, இங்கே வா. இங்கே பார். அந்த நாளில் சிந்தூர மரத்தின் கீழே என்னோடு நின்ற அந்த ஒருவர் இவர் தான்” என்றான். அவர் ஆபிரகாமினுடைய தேவனாயிருந்தார்.

***91.*** *அதன் பின்னர் தானியேல் அவருடைய தோளைப் பார்த்து, "நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய், கைகளால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்த அந்தக் கல்தான் அது" என்று கூறுவதை என்னால் காணமுடிகிறது.*

***92.*** *யோபு எழும்பி, "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், என்றோ ஒருநாள் அவர் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிவேன் என்று நான் கூறின என்னுடைய மீட்பர் அவரே. என்னுடைய சரீரம் ஒன்றுமேயில்லாமல் ஒரு சிறு கரண்டியளவு கொண்ட சாம்பலாயிருக்கலாம். ஆனால் இப்பொழுதிலிருந்து இன்னும் பதினைந்து நிமிடத்திற்குள்ளாக, நான் என் சரீரத்தை மீண்டும் பெற்று அதில் இருப்பேன். அது அவரேதான்" என்று கூறுவதை நான் காண்கிறேன்.*

*93.* எசேக்கியேல் அங்கு மேல் நோக்கிப் பார்த்து, "நான் இதே நபரைத்தான் பூமியிலிருந்து ஆகாயத்திற்கு எழும்பின சக்கரத்தின் நடுவில் உள்ள சக்கரத்தில் கண்டேன்" என்றான். ஓ, என்னே!

*94.* அதன் பின்னர் ஏனோக்கு வருகிறான். ஏனோக்கு, "நியாயத்தீர்ப்புக் கொடுக்க ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு அவர் வருகிறதை நான் கண்டேன்" என்றான்.

*95.* அங்கே பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் காத்துக் கொண்டிருந்தனர். நிச்சயமாகவே அவர்கள் பாவநிவர்த்தியின் இரத்தத்தின் கீழ் இருந்தனர். அவர்களால் தேவனுடைய சமூகத்திற்குள், பரலோகத்தின் தேவனண்டைச் செல்ல முடியவில்லை. ஏனென்றால் வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டின் இரத்தமானது பாவத்தைப் போக்க முடியாதிருந்தது.

***96.*** *ஆனால் அவர், "என் சகோதரர்களே, நீங்கள் நினைக்கிற அந்த ஒருவர் நான்தான். நான் ஸ்திரீயின் வித்தாயிருக்கிறேன். நான் தாவீதின் குமாரனாயிருக்கிறேன். நான் தேவ குமாரனாயிருக்கிறேன். நான்தான் அந்தக் கன்னிப் பிறப்பான ஒருவர். என்னுடைய இரத்தம் அதற்காக பாவநிவர்த்தி செய்துள் ளது. நீங்கள் செம்மறியாடு மற்றும் வெள் ளாட்டின் இரத்தத்தின் கீழ் காத்திருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ என்னுடைய இரத் தம் பாவநிவர்த்தி செய்கிறது. எனவே நீங்கள் விடுதலையாகியிருக்கிறீர்கள். நாம் மேலே எழும்பிச் செல்வோமாக. ஏறக்குறைய உயிர்த் தெழுதல் நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்றார். இன்றிரவு ஆயிரத்து தொளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சம்பவித்ததைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள்.*

***97.*** *ஆபிரகாம், ஆண்டவரே, நாங்கள் மீண்டும் எங்களுடைய சரீரத்தில் எழும்பி வருவதை சாராளும் நானும் அவ்வளவாய்*

*விரும்பினோம். நாங்கள் உம்முடைய பாதையில் செல்லும்போது, சில இடத்தில் நாங்கள் சற்று நின்று பார்ப்போமேயானால், நீர் அதை விரும்புவீரா?" என்று கேட்பதை என்னால் கேட்க முடிகிறது.*

***98.** அதற்கு அவரோ, "ஏன் விரும்பமாட் டேன், நிச்சயமாக விரும்பாமலிருப்பேனா? நான் என்னுடைய சீஷர்களோடு ஏறக்குறைய நாற்பது நாட்கள் தரித்திருக்கப் போகிறேன். எனவே சுற்றும் முற்றும் பாருங்கள். ஒவ் வொரு காரியமும் எப்படிக் காணப்படுகிறது என்று பாருங்களேன்!" என்று கூறுவதை என்னால் கேட்கமுடிகிறது.*

***99.** அந்த மகிமையான உயிர்த்தெழுந்த ஈஸ்டர் காலையில் (கர்த்தருக்கு சித்தமானால் நாம் யாவரும் அந்தக் காலையில் எடுத்துக் கொள்ளப்படுவோம்.) அவர் மரித்தோரி லிருந்து எழுந்தபோது, பரி. மத்தேயு **27**ம் அதிகாரத்தின்படி, "பூமியின் தூளிலே நித்*

திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்கள் எழும்பி கல்லறைகளை விட்டு வெளியே வந்தனர்'' என்று வேதம் கூறியுள்ளது. அது யாராயிருந்தது? ஆபிரகாம், ஈசாக்கு, யாக் கோபு, யோபு, என்றோ ஒரு நாள் மீட்பர் பூமியின்மேல் நிற்பார் என்று ஆவிக்குரிய பிரகாரமாய் வெளிப்படுத்தப்பட்ட வெளிப் பாட்டின் மூலமாய் அவர்கள் அதை அறிந் திருந்தனர். அது அவர்களாய், அந்த நித்திரை யடைந்திருந்தவர்களின் முதற்பலனாயிருந்தது. அவர்கள் அங்கே நகரத்திற்குள் நடந்து சென்றனர். சாராளும், ஆபிரகாமும் முழு ... வாலிபமாக, அழகாக, முழுமையான ஜீவ னைக் கொண்டவர்களாக, இனி ஒருபோதும் வயோதிபமடையாதவர்களாக, இனி ஒரு போதும் சுகவீனமடையாதவர்களாய், இனி ஒருபோதும் பசியடையாதவர்களாய் தங்க ளுடைய சரீரங்களில் சுற்றி நடந்து வருவதை என்னால் காணமுடிகிறது.

*100. காய்பாவோ அங்கு நின்றுகொண்டு, "என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அன்றொரு நாள் அங்கே ஏதோ ஒரு காரியம் சம்பவித்ததாயிருந்தது. இந்தத் தேவாலயத்திற்குள்ளே காணப்படுகிற இந்த அலங்கோலத்தை சற்று பாருங்களேன்! அங்கே உள்ள ... நாம் யாராவது ஒருவரைக் கொண்டுவந்து அந்த தேவாலய திரைச் சீலையை தைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தப் பலிபீடம் நிலைமாறி கவிழ்க்கப்பட்டதைப் பாருங்கள். என்ன சம்பவித்தது? அந்த ஆள் ஜோதிடராயிருந்தாரா? அவர் ஒரு சூனியக்காரராயிருந்தாரா? இல்லையென்றால் என்ன சம்பவித்தது? ஜோசியஸ் இங்கே வா, அங்கே நின்றுக் கொண்டிருக்கிற அந்த வாலிபத் தம்பதியினர் யார்? என்று சொல்லுங்களேன்!" என்கிறான். ஆபிரகாமோ, "சாராளே, நாம் அடையாளங் கண்டு கொள்ளப்பட்டுவிட்டோம். எனவே*

நாம் இங்கிருந்து வெளியேறுவதே மேலானது" என்று கூறினான்.

*101.* "அநேகருக்கு காணப்பட்டனரே!" அவர்கள் யாவருக்கும் காணப்படவில்லை. முடிவிலே கவனியுங்கள். அவர் உயிர்த்தெழுந்த பிறகு ஒரு நாள், அவர்கள் விஜயம் செய்தனர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அவர்கள் யாவரும் அந்தத் தாய்நாட்டிற்கு விஜயம் செய்தனர். இயேசுவானவர் உன்னதத்திற்கு ஏறிப்போகையில்...

*102.* நீங்களோ, "சகோதரன் பிரன்ஹாம், அது கற்பனையா?" என்று கேட்கலாம். இல்லை ஐயா! நான் இன்னும் ஒரு நிமிடத்தில் அதற்கான வேத வாக்கியங்களை உங்களுக்கு காண்பிக்கவுள்ளேன்.

*103.* அவர் மேலேறிச் செல்லத் துவங்கும்போது, அவர்கள் அவரை மாத்திரமே கண்டனர். ஆனால் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அவரோடு சென்றனர். ஏனென்

*றால் வேதமோ, “அவர் சிறைப்பட்டவர் களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு வரங் களை அளித்தார்” என்று கூறியுள்ளது. அவர் மேலேறிச் செல்கையில், அவர் தம்முடைய சபையோடு இணைகிறதை என்னால் காண முடிகிறது.*

*104. இசையை இசைத்துக் கொண்டிருந்த அந்தக் குழுவிலிருந்து இரண்டு தூதர்கள் அங்குத் திரும்பிவந்து, “கலிலேயராகிய மனு ஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? ஏனென்றால் எடுத்துக் கொள்ளப்பட்ட இதே இயேசுவானவர் மறு படியும் வருவார்” என்று கூறினர். நிச்சய மாகவே! பின்னர் அவர்கள் மீண்டும் அந்த ஊர்வலத்தில் இணைந்து கொள்ள அவசர மாகச் சென்றுவிட்டனர்.*

*105. ஆகாய மண்டலத்தினூடாக இயேசு வும், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் சென்றனர். அவர்கள் சந்திரனைக் கடந்து*

*சென்றனர். அவர்கள் சூரியனைக் கடந்து சென்றனர். அவர்கள் நட்சத்திரங்களைக் கடந்து சென்றனர். அவர்கள் அந்த மகத்தான காட்சிக்குள், அழகான வெண்மையான ஆகாய மண்டலங்களுக்குள் பிரவேசித்த போது, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான் களோ, "அநாதி கதவுகளே, உயருங்கள்; உயர்த்துங்கள்; அநாதிக் கதவுகளே உயருங் கள்; உயருங்கள்; மகிமையின் ராஜா உட் பிரவேசிப்பார்" என்ற இந்த வேத வாக் கியத்தை மேற்கோளிட்டு கூச்சலிட்டனர்.*

***106.*** *அப்பொழுது பரலோகத்தின் படிக்கட்டுகளின் கைப்பிடி கம்பிகளண்டை எல்லாத் தூதர்களும் ஒன்றுகூடி, "யார் இந்த மகிமையின் இராஜா?" என்று கேட்டனர்.*

***107.*** *அதற்கு பழைய ஏற்பாட்டு பரிசுத்த வான்களோ, "அவர் சேனைகளின் கர்த்தரான வர், யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவராமே! ஒரு*

*ஜெயவீரராயிற்றே!” என்றே பதில் உரைத் தனர்.*

***108.*** *அப்பொழுது தேவதூதன் அந்தப் பெரிய பொத்தானை அழுத்த, முத்துகளினா லான வாசல்களோ சுழன்று திறந்தன.*

***109.*** *அப்பொழுது அந்த மகா பெரிய பராக்கிரமமுள்ளவரான ஜெயவீரர் நேராக எருசலேம் நகரத்தினூடாக பழைய ஏற் பாட்டு பரிசுத்தவான்களைக் கொண்டு வருகி றார். தூதர்களின் கூட்டம் இசை இசைத்துக் கொண்டும், ஆரவார மிட்டுக் கொண்டுமிருக் கின்றனர். அவர் பராக்கிரமமுள்ள ஜெய வீரராயிருந்தாரே! அவருடைய பக்கவாட்டில் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு கோல்கள் தொங்கிக் கொண்டிருக்க, அவர் சிங்காசனத்தண்டைக்குத் தாம் விட்டுவந்த மகிமையின் ஸ்தலங்களுக்கு நேராகச் சென் றார். அப்பொழுது அவர், “பிதாவே, இதோ இவர்கள் இருக்கிறார்கள். என்றோ ஒரு நாள்*

*நான் வருவேன் என்ற உம்முடைய வார்த்தையின் பேரிலான விசுவாசத்தில் அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தனர். நான் மரணத்தையும், பாதாளத்தையும் ஜெயித்தேன்" என்று கூறினார். சகோதரனே, அது என்ன வாயிருந்தது? அவர் யுத்தத்தில் இருந்து வந்தார் என்று காண்பிக்கும்படியாக அவர் தம்முடைய கையில் தழும்புகளை உடையவராயிருந்தார். உன்னதத்திலுள்ள தேவனுக்கே மகிமை! அவரே அந்தப் பராக்கிரமமுள்ள ஜெய வீரராயிருக்கிறாரே! அவர், "பிதாவே, இதோ அவர்கள் இருக்கிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு" என்றார்.*

***110.** அப்பொழுது அவரோ, "குமாரனே, நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்று கூறுவதை என்னால் கேட்கமுடிகிறது. சகோதரனே, என்றோ ஒரு நாள் அவர்*

*மீண்டும் வருவார், அப்பொழுது அது என்னே ஒரு நாளாயிருக்கும்!*

***111.*** *அவர் கல்லறையில் இருந்த போதும், அவர் வீணாயிருக்கவில்லை. அவர் அங்கே வெறுமனே மரித்தவராய் படுத்துக் கொண்டிருந்தார் என்றே நாம் நினைக்கி றோம். ஆனால் அவரோ இன்னும் தாழ இறங்கி ஜெயங்கொண்டு, அவர் தாழ இறங்கி சாத்தானிடமிருந்து திறவுகோல்களை கைப்பற்றினார். அவர் இன்றிரவு மரணத்திற் கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார். எனவே அவர், "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்றார்.*

# மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதல்

# 4



அதேவிதமாகத்தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1211M
# பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

*அங்கே உங்களில் சிலர், இக்காலையில் ஒன்றில் மேசையருகே அமர்ந்திருப்பீர்கள்.*

*அதில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படு வார், இன்னொருவர் கைவிடப்படுவார்.*

*முடிவாக நீங்கள் அதிசயப்படுவீர்கள், "இது என்ன விஷயம்" என்று.*

*ஒரு மோட்டார் வாகனத்தை உங்கள் மனைவியோடோ அல்லது உங்கள் கணவ னோடோ பேசிக்கொண்டே ஓட்டிக் கொண்டே சென்று கொண்டிருக்கக் கூடும், நீங்கள் கேட்பதற்கு அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள், ஏனெனில் அவர்கள் திடீரென அங்கு இருக்க மாட்டார்கள்.*

கல்லறைக்கு ஓடிச்செல்வீர்கள், சில கல்லறைகள் திறந்திருக்கும், வேறு சில இன்னமும் அப்படி மூடியே கிடக்கும்.

"மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடைய வில்லை". அப்படியே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது அப்பொழுது முடி வடைந்திருக்கும்.

**141.** அது ஒரு இரகசிய வருகையாக இருக்கும், அது எப்பொழுது சம்பவிக்கப் போகிறது என்பதை ஒருவரும் அறியமாட் டார்கள்.

நாம் ஆயத்தமாகவும் விழிப்புடனும் இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறாம்.

எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம்.

ஆனால் அது என்னவாயிருந்தாலும் சரி, கடந்த காலத்தில் மரித்தவர்களுக்கு நாம் முந்திக் கொள்வதில்லை.

இயேசு தோன்றியதுமே, முழு ஜாமமும் விழித்தெழுகிறது. மரித்தவர்களோ, உயிரோ டிருக்கிறவர்களோ, யாராயிருந்தாலும் சரி.

*142.* முதலில், நாம் அவரை சந்திப்ப தில்லை. நாம் ஒருவரையொருவர் முதலில் சந்திப்போம்.

வேதம் கூறுகிறது எபேசியர் 5ம் அதி காரம் - "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர் களுக்கு முந்திக்கொள்வதில்லை".

தங்களுடைய சாட்சிகளை தங்களுடய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த விலை யேறப்பெற்ற மக்கள். "நித்திரையடைந்தவர் களை நாம் முந்திக் கொள்வதில்லை. ஏனெ னில்... எக்காளம் தொனிக்கும்" அப்பொழுது ஒன்று சம்பவிக்கும். "சுவிசேஷத்தின் ஏதோ

ஒன்று தொனிக்கும்." அது தானே அவருடைய வருகையை அறிவித்தலாகும்.

"கிறிதுவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள்." பின்பு உயிரோடிருக்கும் காத்திருக்கும் நாமும் மறுரூபமடைவோம்.

ஒரு க்ஷணத்தில் ஒரு இமைப்பொழுதில், நாம் மறுரூபமடைவோம், சுருக்கங்கள் மறைந்து போகும்.

நரை மயிர் நீங்கிவிடும், ஒரு மாற்றம் ஏற்படுவதை நாம் நன்கு உணருவோம்.

நாம் நின்று கொண்டிருக்கையில், நமக்குப் பிரியமானவர்களை முதலில் நாம் சந்திப்போம்.

"அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார்கள், அதோ அங்கே என் பிரிய சிநேகிதன் இருக்கிறான். ஓ, அல்லே

லூயா, நாம் ஆயத்தமாக இருக்கிறோம்" என்று சொல்லுவோம்.

மரித்துயிர்த்து அவர்களோடுகூட நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த் தரை சந்திப்போம் என்று வேத வாக்கியம் கூறுகிறது.

இதுவே வருகையின் ஒழுங்காகும்.

**143.** ஓ, எனக்கு வயது சென்ற தந் தையை காண்பது எவ்வளவு நன்றாயிருக்கும்! ஓ, என்னே! விசுவாசத்தோடு மண்ணுக்குள் சென்ற நமக்கு மிகவும் பிரியமானவர்களை சந்திப்பது எவ்வளவு அருமையாயிருக்கும்!

தேவனுடைய இனிமையைப் பாருங்கள். அவரை முதலில் நாம் சந்திப்போமானால், "அம்மா அங்கே இருக்கிறார்களா, அம்மா கடைசியாக அதை அடைந்தார்களா? அவர் களுக்கு மிகவும் உறுதியாக பிரசங்கித்தோம், நாம் முயற்சி செய்தோம்; அவர்கள் இங்கு இருக்கிறார்களா? ஜோ அங்கிள் இங்கு

இருக்கிறார்களா? சகோதரன் இன்னார் இங்கு இருக்கிறாரா?" என்றெல்லாம் நாம் கேட்போம் என்று அவர் அறிந்தே இருக்கிறார்.

"கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மை நேசிக்கிறோம், ஆனால்..." என்று கேட்போம். முதலாவதாக நாம் ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறோம். ஓ, ஓ, ஓ. அவர்கள் அங்கு இருக்கிறார்களா என்று நாம் வியக்கத் தேவையில்லை. நாம் யாவரும் அங்கே இருக்கிறோம்.

**144.** அவர்கள், "ஆமென், மகிமையும், ஞானமும், கனமும், வல்லமையும், பெலனும் உண்டாவதாக" என்று கூறியது ஆச்சரியமல்ல.

**145.** இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்றி விட்டு, தரையிலே வணக்கமாய் விழுந்து, அவர்கள் யாவரும் தரையிலே விழுந்து கிடந்து, அவரைத் தொழுது கொண்டனர்.

*146.* இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோகத்தில் போய் விடமாட்டோம்; நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

*147.* ரெபெக்காள் விரைவாக தீர்மானித்தாள். தான் ஈசாக்கை சந்திக்க எலியேசருடன் ஒட்டகத்தின் மேலேறி செல்வோம் என்று அவள் தீர்மானித்தபொழுது, தனக்கு கணவனாக ஆகப்போகிற ஈசாக்கின் முகத்தை அவள் இதற்கு முன் பார்த்ததேயில்லை. ஆயினும் தேவன் அவளை அவனிடம் நடத்திக் கொண்டு இருந்தார்.

மாலையின் குளிர்ச்சியான வேளையில், ஈசாக்கு வயல்வெளிகளில் போவதற்காக போய்க் கொண்டிருந்தான். அது மாலை வேளையாயிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தின் மேலேறி வந்து கொண்டிருக்கிறாள்.

எலியேசர் அவளிடம், “இதோ அவர் வருகிறார்" என்று கூறினான்.

அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி, தன் முகத்தின்மேல் இருந்த முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டாள்.

அவள் இதற்குமுன் அவனைப் பார்த்ததே கிடையாது. அறிந்திருக்கவில்லை... அவன் தான் அவளுடைய கணவன் என்று, அவனை இதற்கு முன் பார்த்ததே கிடையாது.

அவள் அவனை விசுவாசத்தினால் சந்திக்க போவதாக இருந்தாள். (அவர் எப்படி தோற்றமளிப்பார் என்பதை நான் அறியேன், ஆனால், ஓ, அவரை நான் சந்திக்கும் பொழுது!) அவனை அங்கே வெளிகளில் அவள் சந்தித்த பொழுது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது.

அவனும் அவளை இதற்கு முன்பு கண்ட தில்லை. அவன் கண்டபோது, அது கண்ட தும் காதலாக மலர்ந்தது.

இங்கே இவர்கள் ஒருவரையொருவர் வெளிகளிலே சந்திக்க வருகிறார்கள். அவன் அவளைத் தன் தந்தையின் இராஜ்யத்தினுள் கொண்டு வந்து அவளை விவாகம் செய்து கொண்டாள்.

**148.** அதேவிதமாகத்தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும்.

ஓ, அது எப்பேர்ப்பட்ட உறவாக இருக் கும், கண்டதும் காதலாகத்தான் இருக்கும்.

நாம் பூமியின் வளையங்களிலே நின்று கொண்டிருக்கும்பொழுது, அந்த மீட்பின் பாடல்களைப் பாடும்போது, அது எப்படி யாயிருக்கும்!

*ஓ, என்னே! எப்படியாய், நாம் நமக்கு அவர் அளித்த நம்மை மீட்கும் கிருபையைக் குறித்து, அவரைப்பாடித் துதிப்போம். பூமி யின் வட்டத்தை, தலை வணங்கியவாறு, தூதர்கள் சுற்றி சூழ்ந்து கொண்டிருக்கையில், நாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறோம் என் பதைப் பற்றி அறியாமலிருப்பார்கள்.*

*அத்தூதர்கள் இழக்கப்படவில்லை. இரட் சிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அத் தூதர்கள் அறிய மாட்டார்கள்.*

*நாம் தான் இழக்கப்பட்டோம். நாம் தான் அவ்வாறிருந்தோம்.*

*அப்பொழுது, எவ்வளவு பயங்கரமான காரியம் நமக்கு முன்பாக இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம், அவரோ நம்மை சகல கோத்திரங்களிலும், பாஷைக் காரரிலும், ஜாதிகளிலும் இருந்து தம்முடைய இரத்தத்தினாலே மீட்டார்.*

ஓ, அது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி கொண்டாடுதலான நாளாயிருக்கும்.

**149.** நான் அப்பாடலை விரும்புகிறேன்.

*ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன் றுண்டு.*

*இனிமையாய், இனிமையாய், ஈற்றிலே*

*நான் வான்வெளிக்கப்பால் உள்ள வீட்டிலே*

*உன்னை சந்தித்து வாழ்த்துவேன்.*

*அழிவுள்ளோர் காதுகளில் கேட்டிராத பேரின்ப கீதம் பாடுவோம்.*

*அது மகிமையாயிருக்கும், நான் அறிவிக் கிறேன்,*

*தேவனுடைய சொந்தக் குமாரன் நடத் திச் செல்லுவார்*

*ஆகாயத்தில் நாம் அவரை சந்திக்கையில்.*

*முட்செடியருகே நின்ற மோசேயையும்*

*வீர தாவீதையும் அவன் கவணையும்*

*சொப்பனம் காணும் யோசேப்பையும்*

*குறித்து அறிந்துள்ளீர்.*

*தானியேலும் சிங்கக் கெபியையும் பற்றி எப்போதும் பாடுகிறோம்.*

*ஓ, இன்னும் இவ்விதமான அநேகர் வேதத்திலுண்டு.*

*அவர்கள் யாவரையும் காண நான் வாஞ்சிக்கிறேன் என்று அறிவிக்கிறேன் (அது சரிதான்)*

*அவர்களை சந்திப்பது எவ்வளவாய் ஆனந்தமாயிருக்கும்*

*அது ஆகாயத்தில் சந்திக்கும்போது நடக்கும்*

*(அந்நாளுக்காக காத்திருக்கிறேன்)*



# இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்படுதல்

# 5




இரண்டு சாட்சிகள்

## வெளிப்படுத்தின விசேஷம் 11:3-13

*3. என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்.*

*4. பூலோகத்தின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே.*

*5. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்;*

அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக் கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்பட வேண்டும்.

**6.** அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழைபெய்யாத படிக்கு வானத்தை அடைக்க அவர்க ளுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண் ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்க ளுக்கு வேண்டும்போதெல்லாம் பூமி யைச் சகலவித வாதைகளாலும் வாதிக்க வும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

**7.** அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத் திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்.

*8.* அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.

*9.* ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.

*10.* அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக்

களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதி களை அனுப்புவார்கள்.

*11.* மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்க ளுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர் களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பய முண்டாயிற்று.

*12.* இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார் கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர் களைப் பார்த்தார்கள்.

*13.* அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது;

மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சி யினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



அவர்கள் அவர்களைக் கொலை
செய்யும்பொழுது, மூன்று நாட்கள்
அவர்கள் பிரேதங்கள் வீதிகளில்
கிடக்கும் பொழுது, ஜீவ ஆவி இரு
தீர்க்கதரிசிகளுக்குள் பிரவேசித்து
அவர்கள் எழுந்து நின்று,
மகிமைக்குள் ஏறிச்செல்வார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 60-1211M
# பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

*136. ஆனால் இந்நாட்களில் ஒன்றில் செய்தியானது இஸ்ரவேலுக்குப் போகும்.*

*தேவன் அவர்களிடமாக மோசேயையும் எலியாவையும், வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி அனுப்பிடு வார். அவர்கள் அற்புத அடையாளங்களைச் செய்து காட்டுவார்கள்; அது யேகோவாவின் அடையாளமாகும்.*

*அப்பொழுது புறஜாதிகளின் காலமானது முடிவடைந்திருக்கும்.*

*புறஜாதி சபையைவிட்டு கிருபையானது அகன்று விட்டிருக்கும்; பெந்தெகொஸ்தே யுகமானது முடிவடைந்திருக்கும்.*

*ஸ்தாபனங்கள் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கும். ஏனெனில் அவர்கள் உறங்கும் கன்னியரோடு எழும்பி வருகி றார்கள்; நாம் சிறிது நேரத்திற்குள் அந்த விஷயத்திற்குள் செல்லுவோம். ஆனால் அவர்கள் அந்த பிரிவில் தான் வருவார்கள்.*

***137.*** *ஆனால் அவர்கள் அதைச் செய் யும்பொழுது, யூதர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவார்கள்; அவர்களுக்கு ஒரு எழுப்புதலுண்டாகி, அது மழை பெய் யாது வானத்தை அடைக்கும் காரியத்தைச் செய்யும்.*

*அவர்கள் எல்லாவிதமான அடையாளங் களையும், அற்புதங்களையும் செய்வார்கள்.*

*இறுதியாக ரோமானிய குருக்களாட்சி யானது... கத்தோலிக்க சபையானது யூதர்க ளோடு செய்து கொண்டிருந்த உடன்படிக் கையை முறித்துக் கொண்டு விடுவார்கள். அப்பொழுது அங்கே... அவர்கள் தங்களுக்*

*கிடையே செய்து கொண்ட ஒப்பந்தமானது... அவர் அங்கே செல்லுவார். தேவன் ஆதி நாட்களில் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தது போல, நின்று அவர்களுக்காக யுத்தம் பண் ணுவார்.*

*அவர்கள் முடிவில், அந்த இரு தீர்க்க தரிசிகளையும் கொன்று விடுவார்கள். அவர் கள் தெருவில் கிடப்பார்கள். அவர்கள்மேல் துப்புவார்கள்.*

***138.*** *சில வாரங்களுக்கு முன்பாக, அங்கே அந்த பெந்தெகொஸ்தே ஊழியக்காரரையும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளையும் கொன்று போட்டது போல் நடக்கும். அப்பிள்ளைகளின் சிறிய வயிறு மிகவும் பெரிதாக உப்பிப்போயிற்று. மக்கள் அப்பிரே தங்களின் பக்கமாக நடந்து சென்று, அவர் கள் மேல் துப்பி, அவர்களது உடல்கள் அடக்கம் பண்ணப்படாமல், அப்படியே*

*மூன்று அல்லது நான்கு நாளாக வெயிலில் கிடந்தன.*

***139.*** *அதே காரியத்தையே அவர்கள் செய்வார்கள். வேதம் அவ்வாறு கூறுகிறது. அங்கே சரியாக இதே காரியத்தை அவர்கள் செய்வார்கள்.*

*அவர்கள் அவர்களைக் கொலை செய்யும் பொழுது, மூன்று நாட்கள் அவர்கள் பிரேதங்கள் வீதிகளில் கிடக்கும் பொழுது, ஜீவ ஆவி இரு தீர்க்கதரிசிகளுக்குள் பிரவேசித்து அவர்கள் எழுந்து நின்று, மகிமைக்குள் ஏறிச் செல்வார்கள்.*

*பிறகு, ஏறக்குறைய அதே வேளையில் தான் வெடி வெடிக்க ஆரம்பிக்கிறது. அதுதான் கடைசிநேரம். அப்பொழுதுதான் அவள் முடிந்து போவாள்.*

# வெளி.11:11-12ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-12-04 ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்

*176. அடுத்த 'எடுத்துக்கொள்ளப்படுதல்' தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி, சபைக்கு - மணவாட்டிக்கு சம்பவிக்கும். மரித்தோர் உயிரோடெழுவார்கள். உயிரோடிருப்பவர் உயிர்த்தெழுந்தவர்களுடன் மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.*

*"...கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.*

*ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய*

*சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*

*பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.*

***1 தெச. 4:15-17***

***177.*** *அன்றொரு நாள் நான் இளைய மகன் ஜோசப்புடன் வீதியின் முனையில் நின்றுகொண்டு இராணுவத்தின்*

நாளன்று நடைபெற்ற அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது முதலாம் உலக மகா யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட பீரங்கி கள் பவனி சென்றன.

அவைகளைத் தொடர்ந்து இரண் டாம் உலக மகா யுத்தத்தில் உபயோ கித்த ஷெர்மன் பீரங்கிகளும், அவை களுக்குப் பின்னால் இராணுவ வீரர் களும், தங்க நட்சத்திரப் பதக்கம் பெற்ற தாய்மார்களும் அணிவகுத்து சென்றனர்.

அப்பொழுது அலங்கரிக்கப்பட்ட வண்டி *(Float)* ஒன்று வந்தது.

அதன் முன்பாகத்தில் அறியப்படாத இராணுவ வீரனின் கல்லறை ஒன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

ஒருபுறம் ஒரு மாலுமியும், மறுபுறம் ஒரு இராணுவ வீரனும் அதனைக் காவல் காத்தனர்.

அந்த வண்டியின் மற்றொரு பாகத்தில் தங்க நட்சத்திரம் பதக்கம் பெற்ற ஒரு தாயார், யுத்தத்தில் மரித்துப் போன தன் மகனுக்காகத் துக்கிப்பது போலவும், ஒரு இளம் விதவை யுத்தத்தில் மரித்த தன் கணவனுக்காக மேசைமீது தலை வைத்து அழுது கொண்டிருப்பதையும் போலவும், அவளருகில் தகப்பனை இழந்த அவள் மகன் கண்கலங்கி நிற்பது போலவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

*என்னே பரிதாபம் என்று நான் நினைத் தேன்.*

*நான் கவனித்துக் கொண்டே இருக் கும்போது, ஊனமுற்ற வயது சென்ற இராணுவ வீரர்கள் பெருமையுடன் தங்கள் இராணுவ உடைகளைக் காண் பித்துக் கொண்டு அணிவகுத்து செல் வதைக் கண்டேன். அவர்கள் அமெரிக் கர்கள் என்பதில் பெருமை கொண்டனர்.*

*178.* **அப்பொழுது நான், "ஆண்ட வரே, ஒரு நாள் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோ டெழுந்திருப்பார்கள். இது நிகழக்காத் துக் கொண்டிருந்த முன்பிருந்த சபை காலங்களின் பரிசுத்தவான்கள் உயி ரோடெழுந்து தங்கள் கல்லறைகளை**

விட்டு வெளியே வருவார்கள். அப் பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர் களுடன் அணிவகுத்து ஆகாயத்துக் குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீ ரத்திற்கு ஒப்பாக மறு ரூபப்படும்" என்று எண்ணிக் கொண்டேன்.

எடுத்துக் கொள்ளப்படுதலானது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோ கத்தை நோக்கிப் புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும் என்பதை சிந்தனை செய்து பாருங்கள்.

ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்து வின் இரத்தம் தங்கள் மார்புகளில் பூசப்பட்டதையும், அவர்கள் காலத்து செய்திக்காக உண்மையாக வாழ்ந்த தையும் பெருமையாய் மற்றவர்களுக்குக் காண்பித்து அணிவகுத்து செல்வார்கள்.

**சகோதரனே, வரப்போகும் அந்த எடுத்துக் கொள்ளப்படுதலின் வேளைக் காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி யிருக்கிறோம்.**

*179. நாம் முடிக்கும் முன் இதை கவனியுங்கள். முதலாம் எடுத்துக் கொள் ளப்படுதல் நிகழ்ந்துவிட்டது. இரண்டா வது இப்போது நம் அருகில் உள்ளது.*

*180. 'எடுத்துக் கொள்ளப்படுதல்' மூன்றாம் முறை நிகழும். வெளி.11:11-12ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.*

*'மூன்றரை நாளைக்குப் பின்பு தேவ னிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக் குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர் கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களை*

பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டா யிற்று.

இங்கே ஏறி வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார் கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர் களைப் பார்த்தார்கள்" வெளி. 11:11-12.

இவ்விரு சாட்சிகளும் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்களாய் மறுபடியும் வந்து, யோசேப்பு தன் சகோதரருக்குச் சாட்சியாக இருந்தது போல, இவர்களும் யூதர்களுக்குச் சாட்சிகளாக இருப்பார் கள்.

அவர்களுடைய பிரேதங்கள் மூன்றரை நாட்கள் வீதிகளில் கிடக்கும்.

அதன்பின்பு ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 'எடுத்துக் கொள்ளப்படுதல்' பழைய ஏற்பாட்டின் காலத்தில் மூன்று முறை நிகழ்ந்தது. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் அது மூன்று முறை நிகழும்.

*181.* பரிசுத்தவான்களின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக நாம் காத்திருக்கிறோம்.

'எடுத்துக் கொள்ளப்படுதல்' நிகழும் என்று வேதாகமத்தில் உரைக்கப்பட்டுள்ளதால், அது நிகழும் என்பது உறுதி.



# வேதாகமத்திலுள்ள ஐந்து எடுத்துக் கொள்ளப்படுதல்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து